


# நிதித்துறை

## மானியக் கோரிக்கை

## எண்.16

# அறிவிப்புகள்

# 2022 - 2023

# நிதித்துறை

## மானியக் கோரிக்கை
## எண். 16

## அறிவிப்புகள்
## 2022 - 2023


**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனிதவள

மேலாண்மைத்துறை அமைச்சர்

## 1. துறை மறுசீரமைப்பு

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (IFHRMS) மற்றும் பிற சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் வாயிலாக நிதித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அமைப்புகளின் பணி நிலை மற்றும் பணிச்சுமை பெரும் அளவில் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளன. எனவே, கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை, அரசு தகவல் தொகுப்பு விவர மையம், ஓய்வூதிய இயக்ககம் மற்றும் சிறுசேமிப்பு இயக்குநரகம் ஆகியவற்றின் செயல்திறனை மேம்படுத்த அரசு அத்துறைகளை மறுசீரமைக்கும். மேலும், இம்மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் தமிழ்நாடு கருவூல மற்றும் கணக்குகள் விதித் தொகுப்பு திருத்தி எழுதப்படும்.

## 2. அரசு பொது நிதி நிறுவனங்களின் சீர்திருத்தங்கள்

அரசு பொது நிதி நிறுவனங்களான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TNPOWERFIN), தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் (TNTDFC), தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகம் (TUFIDCO), தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) ஆகியவற்றின் இடர்களை மதிப்பிடுவதற்கும், அவற்றின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும், செலவினத்தைக் குறைப்பதற்கும் விரிவான ஆய்வு ஒன்றை அரசு மேற்கொள்ளும்.

## 3. மாநில பொது நிறுவனங்களின் கழகத்தை (BPE) வலுப்படுத்துதல்

10 கோடி ரூபாய் செலவில் மாநில பொது நிறுவனங்களின் கழகத்தின் (BPE) மேலாண்மையை நவீனமயமாக்கி, வலுப்படுத்துவதன் மூலம் மாநில பொதுத்துறை நிறுவனங்களின் மேலாண்மையை அரசு மேம்படுத்தும். பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல் வழங்க நிதித்துறை வல்லுநர்கள், கணக்கியல் மற்றும் பல்வேறு துறை வல்லுநர்களின் ஆலோசனைகள் பெறப்படும்.

# 4. கடன் மறுசீரமைப்பு

கடன் வாங்குவதால் ஏற்படும் செலவைக் குறைப்பதற்காகவும், மாற்றுக்கடன் சார்ந்த இடர்களை குறைப்பதற்காகவும் பொதுக் கடனை ஆய்வு செய்து மறுசீரமைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

## 5. நிதி பகுப்பாய்வு மையம் (Financial Analytics Centre)

நிகழ்நேர தரவுகளின் அடிப்படையில் அரசு முடிவுகளை மேற்கொள்வதற்காக பேரியல் பொருளாதார மற்றும் நிதிக்குறியீடுகளின் போக்குகளைக் கண்காணிக்கவும் பகுப்பாய்வு செய்வதற்கும் ஒரு நிதி பகுப்பாய்வு மையம் நிறுவப்படும்.

## 6. நிதி மற்றும் தணிக்கை பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல்

கடந்த ஓராண்டில், தரவுகளின் அடிப்படையிலான ஆளுகை, மின்ஆளுகை மற்றும் திறம்பட்ட தணிக்கைமுறை ஆகிய முப்பரிமாண அணுகுமுறையின் அடிப்படையில் அரசு நிர்வாகத்தை முன்னெடுத்து வருகிறது. இந்தச் சீர்திருத்தங்களை நிலைநிறுத்த நிதித்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவது அவசியமாகும். எனவே, நிதித்துறையின் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சி குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, புதிய பயிற்சிக் கொள்கை உருவாக்கப்படும்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனிதவள

மேலாண்மைத்துறை அமைச்சர்